"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்." தாபிதம் : 1876

சத்தியவேத பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி : 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு பங்குனிமீ 14-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 11-ம் இல.

சம்பத்திரிசியார்
கல்லூரியில்
திருப்பாடுகளின்
காட்சி
பங்குனிமாதம் 16-ம், 17-ந்திகதி
திங்கள், செவ்வாய்த்
தினங்களில் பிற்பகல்
7-15 மணிக்கு.

# திருச்சபையின் விவாக நீதிமன்றம்

## பணத்துக்கும் செல்வாக்குக்கும் இடங்கொடாது

வத்திக்கானில் நிறுவப்பட்டிருக்கும் பரிசுத்த விவாக நீதிமன்றம் சகலரையும் ஒரே தன்மையில் மதித்து நீதிவழங்குகின்றது. பணக்காரர், செல்வாக்குடையவர்களுக்கு மற்றவர்களிலும்பார்க்கக் கூடிய இளக்காரம் காட்டப்படுவதில்லை இது இப்படி இருப்பினும், காலத்துக்குக்காலம் செல்வாக்கு அல்லது பணம் உடையவர்களின் விவாக விஷயங்களை இந்நீதிமன்றம் விசாரித்து நீதிவழங்க நேரிடும்பொழுது, ஒரு சிலர் இந்நீதிமன்றத்தின் தீர்ப்பில் பிழைகூறுவதுண்டு. அண்மையில் கர்லஞ்சென்ற அமெரிக்க ஜனுதிபதி கெனடி அவர்களின் மனைவியான ஜக்குலைன் அம்மையாரின் சகோதரி றட்சிவில் என்பவளுக்கு அவரது முன்னுள் விவாகத்திலிருந்து நீக்குதல் இம்மன்றத்தினுல் தகுந்த நியாயங்களுக்கு அளிக்கப்பட்டது. இச்சம்பவம் பழைய பல்லவியை பலஇடங்களிலும் எழுப்பிவிட்டது. இந்நீதிமன்றத்தின் முன்புவரும் விவாக கருமங்கள் பெரும்பாலும் போதிய புத்தியறிவு இல்லாதவர்களது விஷயங்களே. இவற்றுடன் காலத்துக்குக்காலம் பிரபல்ய மக்களது விவாக கருமங்களும் வந்துசேர்ந்து கொள்ளுகின்றன. விஷமிகள் செல்வாக்குடையவர்களுக்கு அளிக்க நேரிடும் விவாக நீக்குதல்களைப்பற்றிப் பேசுவார்களே தவிர வறியமக்களுக்குக்கிடைக்கப்படும் நீதியை எடுத்துப் பேசமாட்டார்கள். விவாகத்தைக் கத்தோலிக்க விவாகமாக்காத நியாயங்கள் உள. அவற்றையே இவ்விவாக நீதிமன்றம் பரிசிலனைசெய்து தீர்ப்பு அளிக்கின்றது.

## சின்னப்ப பாப்பரசரின் அதி வயோதிப நண்பன்

### வண. பொவிலாக்குவா சுவாமிகள்

வண. பொவிலாக்குவா சுவாமிகளின் வயது 82. நாட்டுப்புறத்தின் பங்குக்குரு. 2-ம் வத்திக்கான் சங்கத்தில் ஆலோசக நிபுணராகக் கடமையாற்றியவர். சுவாமியார் நமது பாப்பரசரைப் பற்றிப் பெருமையாகப் பேசியிருக்கிருர். மொன்டினி அதி மேற்றிராணியாரை (6வது சின்னப்பர்) கருதினுலாக்குவதே பாப்பரசரானபின் தான் முதற்செய்த செயலென்றும், தமக்குப்பின் மொன்டினி அதிமேற்றிராணியாரே பாப்பரசராக வருவதைத் தாம் விரும்புவதாகவும் 23-ம் அருளப்ப பாப்பரசர் தமக்குக் கூறியதாகச் சுவாமிகள்வெளியிட்டிருக்கிருர். இவர் கடுமையாக வேலை செய்பவர். ஓய்வுஎடுப்பதென்ருலும் 14 மணித்தியால வேலை செய்வதே அவர் வழக்கம். இவர் பசீஸ்துக் கட்சியை எதிர்த்ததனுல் அவர்கள் இவரது கோவிலையும், இல்லத்தையும் எரித்து அழித்து விட்டனர். அதன்பின் 6 வருடகாலமாக மொன்டினி மேற்றிராணியாருடன் அவர் வீட்டில் வசித்துவந்தார். பாப்பரசரது கல்விக்குப் பொறுப்பாளிகளாய் இருந்தவர்களுள் பொவிலாக்குவா சுவாமிகளது பங்கு பெரிது.

## விவாகத்தைப்பற்றி அநேக வினுக்கள்

இங்கிலாந்தில் நிறுவப்பட்டிருக்கும் கத்தோலிக்க சமய உண்மைகளின் விளக்க நிலையத்துக்கு அனுப்பப்படும் வினுக்களிற் பெரும்பாலானவைவிவாகத்தைப் பற்றியனவே. பின்வரும் நிரைமுறையில் வினுக்கள் வந்துகுவிகின்றன என நிலையத்தின் அதிபர் வண. கே. ரெயிலர் சுவாமியார் கூறுகின்ருர்,

1. விவாகம்: விவாகரத்து, கர்ப்பத்தடை. 2. பாப்பரசர்: வழுவாவரம். 3. பூசைப்பலி: சற்பிரசாதம். 4. ஒற்றுமை: கத்தோலிக்கருக்கும், மறுகிறிஸ்தவ சபையோருக்கும் உள்ள வேற்றுமை. 5. தேவதாயார்: மரியாயின் வணக்கம், மரியம்மாளின் கன்னித்துவம்.

ஒருவாரத்தில் கிட்டத்தட்ட 500 கடிதங்கள் கிடைக்கின்றன. பலகருமங்களிலும் கத்தோலிக்க போதனை யாதுஎன்பதைஅறிந்து கொள்ளப் பிறசமயத்தவர் அநேகருக்கு உள்ள ஆசையை இந்நிலையம் பூர்த்திசெய்ய உதவுகின்றது. "கிறிஸ்தவ சபைகள் யாவும் ஒன்றுசேர்ந்து கடவுளை வணங்குவதற்கு முட்டுக்கட்டையாய் இருப்பது யாது? அதை எவ்வாறு நீக்கிவிடலாம்?" என்பதே வத்திக்கான் சங்க கூட்டங்களின் காலங்களில் பிரதான இடத்தை எடுத்துள்ளது.

## வேதமாற்றத்திற்கு எதிர்ப்பு

இந்துக்களை தமது சமயத்திலிருந்து பிறசமயத்துக்கு மாற்றுவதை எதிர்த்து மத்திய பிரதேச அரசாங்க சபையில் கொண்டுவரப்பட்ட மசோதா சபையின் வாக்கெடுப்பில் நிராகரிக்கப்பட்டது. 13 சரத்துக்கள் உள்ள இந்த மசோதா தனி அங்கத்தவர் ஒருவரால் கொண்டுவரப்பட்டது. பம்பாய் முதல் மந்திரி அதை எதிர்த்து வாதாடினுர். அகில இந்திய கத்தோலிக்கசங்கம் இது நிராகரிக்கப்பட வேண்டும் என்று அயராது உழைத்து வந்தது.

## 12-ம் பத்திநாத பாப்பரசரின் வெண்கலச்சிலை

12-ம் பத்திநாத பாப்பரசரின் ஞாபகமாக வெண்கலத்தினுல் சிலையொன்று நிறுவ 23-ம் அருளப்ப பாப்பரசர் ஒழுங்கு செய்திருந்தார், அந்தவேலை முடிந்துவிட்டது. அந்தச்சிலை இம்மாதம் 12-ம் திகதி அர்ச். சிங்கராயர் தேவாலயத்தில் 6-வது சின்னப்ப பாப்பரசரின் முன்னிலையில் திரைநீக்கம் செய்யப்படுமென்று செய்திகள் கூறுகின்றன. பாப்பரசருக்குரிய அங்கிகளை அணிந்தவண்ணம் ஆசீர்வதிக்கும் தோற்றத்துடன் இந்தச்சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது. சிலையின் உயரம் சுமார் 12 அடி. பிரான்சிஸ்கோ மெசினு என்ற இத்தாலியச் சிற்பியினுல் இதுசெய்யப்பட்டது.

## திருப்பூசையிலே சுயபாஷை

அவுஸ்திரியா, பெல்ஜியம் ஆகிய தேசங்களில் உள்ள குருமார் திருப்பூசையிலே நிருபம், சுவிசேஷம் ஆகிய இரண்டையும் சுயபாஷையில் வாசிக்க அவ்வத் தேசமேற்றிராணிமார் அனுமதித்திருக்கின்றனர். அத்துடன் அவுஸ்திரிய தேசத்திலே இவ்விரண்டையும் வாசிக்கும்போது குருமார் விசுவாசிகள் பக்கம் திரும்பிநின்று முகத்தைக்காட்டி வாசிக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கின்றனர். 2-ம் வத்திக்கான் சங்கத்தில் விவாதிக்கப்பட்டுப் பாப்பரசரின் அனுமதிபெற்ற திருவழிபாட்டுத்திருத்தங்களிற் பெரும்பாலன அவுஸ்திரியாவிலும், ஜெர்மானிய பிரதேசங்களிலும் நடைமுறையாகி விட்டன.

## ஆஸ்பத்திரிக் கன்னியாஸ்திரிமார் சேவையின் புள்ளிவிபரங்கள்

| கன்னியாஸ்திரிமார் சபை : | சேவைசெய்த ஆஸ்பத்திரி : | தொடக்கம் : | முடிவு |
|---|---|---|---|
| மரியாயின் பிரான்சீஸ்கன் சபைக் கன்னியாஸ்திரிமார் | கொழும்பு, பெரிய ஆஸ்பத்திரி. | 1886 | 15-3-64 |
| திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரிமார் | குருநாகல், அரசினர் ஆஸ்பத்திரி. | 1892 | 11-3-54 |
| மரியாயின் பிரான்சீஸ்கன் சபைக் கன்னியாஸ்திரிமார் | ஹெந்தலை, குஷ்டரோக ஆஸ்பத்திரி. | 1914 | 15-3-64 |
| மரியாயின் பிரான்சீஸ்கன் சபைக் கன்னியாஸ்திரிமார் | மாந்தீவு, குஷ்டரோக ஆஸ்பத்திரி. | 1921 | 15-3-64 |
| திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரிமார் சபை | நாவலப்பிட்டி, அரசினர் ஆஸ்பத்திரி. | 1927 | 1-6-64 |
| சதாசகாய கன்னியாஸ்திரிமார் சபை | ரூகம, கயரோக ஆஸ்பத்திரி. | 1929 | 22-1-63 |
| தேவனது நல்லளிப்புக் கன்னியாஸ்திரிமார் சபை | வெலிசற, கயரோக ஆஸ்பத்திரி. | 1948 | 1-10-63 |
| திருச்சிலுவைக் கன்னியாஸ்திரிமார் சபை | ஊர்காவற்றுறை, அரசி. ஆஸ்பத்திரி. | 1936 | 1-6-63 |
| திருச்சிலுவைக் கன்னியாஸ்திரிமார் சபை | யாழ்ப்பாணம், அரசினர் ஆஸ்பத்திரி. | 1938 | 30-11-63 |
| மரியாயின் பிரான்சீஸ்கன் கன்னியாஸ்திரிமார் சபை | மன்னுர், அரசினர் ஆஸ்பத்திரி. | 1947 | 15-3-64 |
| மேரிநொல் கன்னியாஸ்திரிமார் சபை | கண்டி, அரசினர் ஆஸ்பத்திரி. | 1949 | 31-8-59 |
| சல்வரோறியன் கன்னியாஸ்திரிமார் சபை | குருநாகல், அரசினர் ஆஸ்பத்திரி. | 1954 | 28-2-59 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**பங்குனி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 15 | ஞா. | திருப்பாடுகளின் ஞாயிறு | [ஊ] |
| 16 | தி. | காலதினம் | [ஊ] |
| 17 | செ. | ,, ,, | [ஊ] |
| 18 | பு. | ,, ,, | [ஊ] |
| 19 | வி. | அர்ச். சூசையப்பர் | [வெ] |
| 20 | வெ. | காலதினம் | [ஊ] |
| 21 | ச. | ,, ,, | [ஊ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 14-ந் திகதி


## சூசையப்பரிடம் போங்கள்

தேவன் மனுக்குலத்தை இரட்சிக்கத் தமதுசுதனை இவ்வுலகத்துக்கு அனுப்பமுன் அச்சுதனையும், அவரின் திருத்தாயாரையும் பாதுகாக்கவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் தகுதிவாய்ந்த உத்தமர் ஒருவரைத் தேடியபொழுது தேவதெரிவு சூசையென்னும் ஓர் ஏழைத் தச்சனிலே விழுந்தது. சம்மனசுகளுக்குத்தானும் அளவற்ற மகிமையும், புகழும் வருவிக்கக்கூடிய இந்த ஒப்பற்ற தெய்வீக சேவைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர் மறைந்த சீவியம் நடத்திவந்த தாழ்மையான ஒருமனிதன்.

தேவதாயாருக்குப்பின் மனுக்குலத்தின் இரட்சணியத்திலே ஆகக்கூடிய பங்குபற்றியவர் அர்ச். சூசையப்பர். தமது பாதுகாப்பிலே வைக்கப்பட்ட தேவகுழந்தைக்காகவும், கன்னிமரியம்மாளுக்காகவும் இரவுபகலாகக் கடினவேலைசெய்து உழைத்தவர் அவர். பலகொடிய தீங்குகளிலேஇருந்து அவர்களைக் காப்பாற்றியவர் அந்தத் திருத்தந்தை. மனுக்குலத்தோர் எல்லோரிலும்பார்க்க யேசுநாதரையும் தேவதாயாரையும் நேசித்தவர் அர்ச். சூசையப்பர்.

யேசுநாதர் சூசையப்பருக்கு எப்பொழுதும் பணிந்து நடந்துமல்லாமல், அவரிலே உருக்கமான அன்பும், விசுவாசமும் வைத்திருந்தார். அவருக்குத் தன்னாலான உதவிகள் செய்வதிலும், அவரின் விருப்பங்களுக்கு இசைந்து நடப்பதிலும் பெருமிதங்கொண்டார் வாலன் யேசு. சூசையப்பர் கேட்டவைகளை அவர் ஒருபோதும் மறுக்கவில்லை.

பூவுலகிலே சூசையப்பர்கேட்ட ஒன்றையும் மறுக்காத தேவகுமாரன் பரலோகத்திலே அவரின் வேண்டுகோளுக்குச் செவிசாயாமல் இருப்பாரா? இல்லை. தேவன் இன்றும் அன்றும் ஒன்றுதான். அவர் மாறுவதில்லை. இவ்வித மனப்பான்மையுள்ள தளராத நம்பிக்கையுடன் நாம் அர்ச். சூசையப்பர்மூலமாகக் கேட்கும் உதவிசகாயங்களைத் தேவன்நமக்கு நலமெனக்கண்டால் அளிப்பாரென்பது நிச்சயம்.

விசேஷமாக இக்காலத்திலே எங்கள் எல்லோருக்கும் அர்ச். சூசையப்பரின் உதவிதேவை. அதிகப்பற்றுக எங்கும் பணக்கஷ்டம். அத்துடன் வாழ்க்கைச்செலவும் நாளாந்தம் ஏறிக்கொண்டே வருகிறது. பல குடும்பங்களிலே ஒருநேரச் சாப்பாட்டைத்தன்னும் சமாளிப்பது இயலாத அலுவல். படித்தோருக்கு வேலையில்லை; படியாதாருக்கு உழைப்பில்லை. இவ்வித காரணங்களினாலே குடும்பங்களிலே அபிப்பிராயபேதம், அமைச்சலீனம், சண்டைசச்சரவு அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

இந்நிலையிலே எங்களுக்குக் கைதந்து உதவக்கூடியவர் அர்ச். சூசையப்பர். குடும்ப சீவியத்துக்குத் தாபரமும், அலங்காரமும் அவரே. திருக்குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுப் பல இக்கட்டுகள், விபத்துகளுக்கூடாக அக்குடும்பத்தைப் பாதுகாத்து வந்தவர் அர்ச். சூசையப்பர். நாம் அவரண்டை சென்றால் அவர் எங்கள் கஷ்டங்களை நிவிர்த்திசெய்வதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களைக் கேட்டுத் தந்தருளுவார். பல்லாயிர வருடங்களுக்குமுன்னே எகிப்து நாட்டிலே ஒரு கொடிய பஞ்சம் நடந்தபோது அந்நாட்டரசன் தன் சொத்துகள் எல்லாவற்றையும் சூசை என்பவருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டுத் தன்னிடம் உதவிக்குவந்த பிரசைகளை, "சூசையிடம் போங்கள்" என்று அவரிடம் அனுப்பிவைத்தான். அதுபோலவே இக்காலத்திலும் எங்களுக்கு உதவி செய்யக்கூடியவர் இன்னுமொரு சூசை. நாமும் அவரிடம் செல்வோமாக.

அர்ச். சூசையப்பரின் சலுகையை நாம் விசேஷமாக இந்த நாட்களில் நாடுவது பொருத்தம். பங்குனி அர்ச். சூசையப்பரின் வணக்கமாதம். 19-ந் திகதி அவரின் திருநாளைத் திருச்சபை கொண்டாடுகிறது. ஆதலால், இந்நாட்களிலே இகலோக நன்மைகளுக்காக மாத்திரம் அல்ல, ஆனால் அவரின் சிறந்த புண்ணியங்களாகிய தாழ்ச்சி, பொறுமை, அமைச்சல், கற்பு, நீதி ஆதியவற்றை நாமும் அனுசரிக்க வேண்டிய வரப்பிரசாதத்துக்காகவும், விசேஷமாக நன்மரணப்பாக்கியம் அடைவதற்காகவும் அவரின் வல்லமை பொருந்திய உதவியை இரந்து மன்றாடுவோமாக.

# இன்றுநீ நம்மோடுகூடப் பரகதியில் இருப்பாய்

நமது ஆண்டவராகிய கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளை முன்னறிவித்த தீர்க்கதரிசனங்களில் ஒன்று "இவர் பாதகர்களோடு பாதகராய் எண்ணப்படுவார்" என்பதாம்.

மனுக்குலத்தை பாவத்தில் நின்றும் நரகத்தில் நின்றும் மீட்டிரட்சிக்க அவமானகோலத்தோடு சிலுவையில் தொங்கிய சமயத்தில் யேசுபிரானின் தெய்வீகமும், மனுஷீகமும் உன்னத அதிசயத்துக்குரியவிதமாய் அவரிடம் துலங்கின.

இத்தருணத்திலே வலதுபக்கக் கள்வன் மனம்மாறினான். அவனிடத்தில் வரப்பிரசாதம் வந்திறங்கியது. அத்துடன் தன்னையாரென்று உணர்ந்தான். உணர்ந்ததும், சனசமூகத்தின் மத்தியில் தன்னைத்தாழ்த்தித் தனது குற்றங்களை எல்லாம் வெளிப்படுத்தினான். சிலுவையில் மரிக்கும் ஆண்டவரின் மாசற்றதனத்தை யாவரும் அறியப் பகிரங்கமாக அஞ்சாத் தைரியத்தோடு வெளிப்படுத்தினான். இறுதியில் ஆண்டவரிடம் என்னத்தை விண்ணப்பம் செய்தான். பட்டம்பதவியையா இல்லை. தாழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும், "ஆண்டவரே நீர் உமது இராட்சியத்தில் போய்ச்சேரும்போது என்னையும் நினைவுகூர்ந்தருளும்" என்பதே.

இரக்கத்தின் தேவன் தமது கருணையை சகலருக்கு முன்பாகக் காட்டினார். நல்லகள்வனுடைய விண்ணப்பத்துக்கு மறுமொழியாக, "மெய்யாகவேசொல்லுகிறேன். இன்று நீ நம்மோடுகூடப் பரகதியில் இருப்பாய்" என்றுரைத்தார். எவ்வளவு ஆறுதலானவார்த்தை. எவ்வளவு இன்பம் நிறைந்த மொழிகள். எவ்வளவு அபரிமிதமான வெகுமதி. யேசுவின் இன்பசந்நிதானத்திலிருப்பதே அவருடன் கூடிவாழ்வதே பரலோகத்தின் நித்தியஇன்பமாகும்.

வலது பக்கத்துக்கள்வன் மோட்ச பேரின்பமடையவும், இடது பக்கத்துக் கள்வன் மோட்சசம்பாவனையை இழந்து போகவும் என்ன காரணமென்பதை நாம் இவ்விடம் சற்று யோசித்துப் பார்ப்போமாக. வலது பக்கத்துக்கள்வன் தேவகுரலுக்குச் செவிசாய்த்து யேசுநாதரை மெய்யான தேவகுமாரன் என உறுதியாய் நம்பித் தன்பாவங்களுக்கு உத்தம மனஸ்தாபப்பட்டான், தன் குற்றங்களை உணர்ந்தான். இரட்சணிய பாதையைப் பின்பற்றினான். பூரண மன்னிப்படைந்து மோட்சசம்பாவனையை அடைந்தான்.

மற்றவனோ இரட்சகரை இகழ்ந்தான்; வசைமொழிகளைக் கூறினான்; நம்பிக்கையை இழந்தான்; சிருஷ்டிகரைத் தன்னைப்போல் ஒரு சிருஷ்டி என நம்பினான்; பசாசின் வலையில் சிக்கி அவலமாய் மாண்டான். நாமும் இவற்றை நன்குணர்ந்து சீர்தூக்கிப் பார்த்து நம்மைச் சீர்ப்படுத்திக்கொள்வது நமது முக்கியகடமையாகும்.

பிரிய சகோதரமே, நல்ல கள்வனுக்குக் கிடைத்த கடைசிமுடிவு நமக்குக் கிடைத்தாலல்லோ தாவிளை. இரக்கத்தின்காலம் வந்துவிட்டது. வல்லபக்கடவுள் நமது பாவங்களை எல்லாம் மன்னிப்பார். படுபாதகக் கொலைக்காரக் கள்வனை மன்னித்துப் பரகதிக்கு அழைத்தவர் நமது பாவங்களைமன்னிக்கமாட்டாரா? கட்டாயம் மன்னிப்பார். இதனால் நாம்செய்யவேண்டியது என்ன? இத்தபசுகாலத்திலே நெறிகெட்ட இன்பசுகங்களைக் குறைப்போம். நாம் கட்டிக்கொண்ட பாவங்களுக்காகப் பரிகாரம்செய்வோம். அப்போது இரக்கமுள்ள யேசு எமது பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பை ஈந்து பேரின்ப மோட்சமுடியை நமக்கருளுவார் என்பது உண்மை.

F. B. M.

# பிரிட்டிஷ் பாராளுமன்ற பழுத்த கத்தோலிக்க அங்கத்தவர் திரு. டேவிற் லோகன் (C. B. E., K. C. G.) காலமானார்

சென்றமாதம் இவர் இறக்கும்போது வயது 92. லிவர்ப்பூல் நகர ஸ்கொத்திலாந்து பிரிவின் பாராளுமன்ற அங்கத்தவராக 1929-ம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றிவந்தவர். கத்தோலிக்கபள்ளிக்கூடங்களுக்காகவும், உபத்திரவப்படுத்தப்பட்ட ஐரோப்பிய இனத்தவருக்காகவும் இவர் செய்த சேவைகளுக்காகப் பாப்பரசர் அர்ச்சியசிஷ்ட கிறகோரியாரின் 'நைற்' பட்டத்தை இவருக்கு அருளிக் கௌரவித்தார். சமூக வேலைகளுக்காக 6-வது ஜோர்ஜ் மன்னரால் சி. பி. ஈ. பட்டம் வழங்கப்பட்டது. இறக்கும்வரையும் தனது இருப்பிடத்தையோ, வேலையகத்தையோ பழைய வறிய சுற்றாடலிலிருந்து மாற்றமறுத்துவிட்டார். அதற்கு அங்குள்ள அர்ச்சியசிஷ்ட அந்தோனியார் கோவிலில் அவருக்கு இருந்துவந்த அபிமானமே பிரதான காரணமாகும். கஷ்டப்படுபவர்களை எந்நேரமும் அவரது இருப்பிடத்தில் தொகையாகக்காணலாம். தொழிலாளர் சார்பாகச் சட்டங்கள் இன்று போல் இல்லாத அக்காலந் தொடக்கமாக அவர்களின் நலனுக்காக அரசாங்கத்தாரிடம் வாதாடிவருவார். ஒருமுறை இவ்வாறு அக்காலக் கல்விமந்திரியாராகிய டிறெவல்யன் என்பவருடன் வாதாடியபொழுது மந்திரியார் கோபமுற்று இவரை அறைக்கு வெளியேதள்ளிவிட முயற்சித்தாராம். இவருக்கு வத்திக்கான்நகரில் பெரும் செல்வாக்கு இருந்தது. பாப்பரசரையோ, வத்திக்கான் உயர் அதிகாரிகளையோ பேட்டிகாண விரும்பிய பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவர்களும். பிறரும் இவரது உதவியை நாடுவது வழக்கமாகிவிட்டது. பாராளுமன்றத்தில் முதன்முதல் இவர் ஆற்றிய சொற்பொழிவு கத்தோலிக்க பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் நீதிவழங்கவேண்டுமென்பது பற்றியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சகோதரிகளே, வணக்கம்!

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமடி" என்று பண்டைய புலவனொருவன் பாடிச்சென்றான். எத்தவமும் புரியாமல் எந்தாய் தந்தையர் செய்த பேற்றினால் நாம் மங்கையராகப் பிறந்துவிட்டோம். ஆனால், மறுவுலகில் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டுமானால் நாம் மாதவம் செய்திட வேண்டுமல்லவா?

ஏவாளின் சந்ததியாகப் பிறந்ததால் பாவச் சார்புள்ளவர்களானோம். அதைநீக்க அன்னைமரியின் சற்புத்திரன் அருந்தவஞ் செய்யும் வழிகாட்டினார். இன்றைய உலகில் பெண்குலம் பேய்க்குலமாகின்றது. மாதர் எம் குலத்தை இழிவு செய்யும் நமது மடமைக் கொள்கைகளை மாற்றுவோம். அருந்தவம் புரிந்து பெரும்பேறுபெற்று இப்பூவுலகில் பெண்ணின் பெருமைகளை நிலைநாட்டுவோம். எம் தவத்தின் பயனால், பாவப் பொறுத்தல் அடைந்து மறுமை இன்பம் அடைய வழி வகுப்போம்.

ரோஜா.

# கண்டதும் கேட்டதும்

## பாட்டொன்று கேட்டேன்:

பி. ப. 7½ மணி இருக்கும். மாலைப் பொழுதின் அமைதியைக் கிழித்துக் கொண்டு "மரியாயே! என் நல்ல தாயாரே! இந்த இராத்திரியிலே எங்களைச் சாவானபாவத்தினின்றும்......" என்ற செபம் பாட்டாக ஒலித்து என் காதில்விழுந்தது. பெரியோரது ஒலிகளும், சிறாரது மழலைமொழிகளுமாக இவ்வினிய கீதம் கேட்க மதுரமாயிருந்தது. ஒவ்வொருநாளும் இஃதேநேரத்தில் எங்கிருந்து இந்த ஒலி வருகிறது என்பதை முதலில் தெரிந்துகொண்டேன். ஆம், அன்பினால் இணைக்கப்பட்ட ஒரு தம்பதிகளின் குடும்பம் அது. மக்கட்செல்வம் நிறைந்த இல்லம் அது. அங்கேதான் தினந்தவறாது குடும்ப ஜெபமாலை ஒலிக்கிறது. அதன் முடிவில் இவ்வினியகீதம் தென்றலில் ஒலிபரப்பாகிறது. **"தெருவெல்லாம் ஜெபஓசை முழங்கவேண்டும்"** என்ற அருமையான பதத்தின் அர்த்தத்தை அன்றுதான் புரிந்துகொண்டேன். தபசுகாலமானால் வெள்ளி, ஞாயிறுவாரங்களில் "பிழைதீர்க்கும் மந்திரம்" பாடுவார்கள். குடும்ப எசமான் சில அடிகளைப்பாட மற்றையோர் "தயவாயிரும் சுவாமி" என்ற வேண்டுதலைப் பாடுவார்கள். நாகரிக அம்சங்களில் மூழ்கித்திளைக்கும் இன்றைய உலகில் பசாம் வாசிக்கும் அரிய பழக்கத்தைக் கைவிடாத குடும்பம் இது. அவர்கள் வாழ்க்கைகூட ஒழுங்காகவே நடைபெற்றுவருகிறது. மாலைவேளைகளில் சிறார்கூடி விளையாடும் ஆர்ப்பரிப்பிடையே பெரியோரும் அவர்களை ஊக்குவித்து மகிழ்வர். ஞாயிறுவாரங்களில் காலைவேளையில் கணவனும் மனைவியும் முதற்பூசை முடிந்துவர 8 வயது நிரம்பாத முதற் சிறுமியின் தலைமையில் மற்றப்பிள்ளைகள் பூசை செல்ல ஆயத்தமாகி நிற்பர். அன்றைய மாலைவேளைகளில் குடும்ப சமேதராய் அவர்கள் உலாவப்போகும் காட்சி மாட்சியுடைத்து. இக்குடும்பம் ஒருமித்துச் செபிப்பதால் என்றும் ஒருமித்து வாழுமன்றோ! கத்தோலிக்க குடும்பத்தவர்களே! ஒரு கைதட்டினால் ஓசை உண்டாகுமா? ஒரு குடும்பம்மட்டும் குடும்ப ஜெபமாலையில் முன்னேறினால் தெருவெல்லாம் ஜெப ஓசை முழங்குமா? என்று நம்மை நாமேகேட்டுக்கொள்வோமாக!

## கதையொன்று படித்தேன்:

இந்தியாவிலிருந்து வெளியாகும் சென்றவார தமிழ்ச் சஞ்சிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்த கதையொன்றைப் படித்தேன். குடும்பத்தினிடையே அமைதிநிலவ மூலகாரணத்தை எடுத்துக்காட்டும் அருமையான கதை அது. கணவனும் மனைவியும் இன்பமாக வாழுகிறார்கள். ஒருநாள். மாலைவேளை பிறந்தகம் வந்திருக்கும் தனது பாலிய சிநேகிதியுடன் பேசிவர அவள்வீடு செல்வோமா என்று கேட்கிறாள் அவள். அவள் தோழியுடன் சம்பாஷிப்பதில் அவனுக்கு இன்பம் எதுவுமில்லையே. அவனோ "பின்னேரம் அருமையானசினிமாப்படம் காண்பிக்கிறார்கள். இரண்டு அனுமதிச் சீட்டுக்குச் சொல்லியிருக்கிறேன்; அங்கே போவோம்" என்கிறான். இருவருமே பிடிவாதமாயிருக்கிறார்கள். பேச்சுமூச்சின்றி சாப்பாடு முடிகிறது. அவன் ஆபிஸ் செல்கிறான். மதிய போசனத்துக்குக்கூடத் திரும்பவில்லை. அத்தனை கோபம். மாலையாகிறது. விவேகமுள்ள பெண் அவள். தனக்குள் சிந்திக்கிறாள். ஒரு பெண்ணுக்குக் கணவனே தெய்வம். அவனைத் திருப்திப்படுத்துவதுதான் அவளுக்கழகு. தோழியை எப்போது வேண்டுமானாலும் போய்ப்பார்ப்போமே என்றெண்ணுகிறாள். முடிவில் படம்பார்ப்பதற்குத் தயாராகிறாள். அவனுக்குப் பிடித்தமான சேலையொன்றை அணிந்துகொள்கிறாள். களைத்துப்போய்த் திரும்பிய அவனுக்குத் தேநீர் உபசரணை நடைபெறுகிறது. "படம் பார்க்கப் போகலாமே" என்று மொழிகிறாள். அவன் முகத்தில் ஒரு சிறு புன்னகை. டாக்சி அனுப்பப்படுகிறது. கால்மணி நேரத்தில் தரிக்கிறது ஒரு கட்டிடத்தின்முன். தியேட்டரா அது? இல்லையே. கமலாவின் வீடு அல்லவா அது. திகைத்துப்போன அவள் காதுகளில் "என் இன்பம் எனக்குப் பெரிதல்ல. நீ சந்தோஷமாக வாழ்வதுதான் எனக்குக் கொள்ளை சந்தோஷம்" என்ற இனிய வார்த்தைகள் ஒலிக்கிறது. இல்லறத்தோரே! **விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைதான் குடும்ப ஒற்றுமையின் ஆணிவேர்** என்பது தெளிவாகிறதல்லவா? இருவருமே முரண்டு பிடித்திருந்திருந்தால் அவர்கள் வாழ்க்கைப் படகு அன்றே திசைதிரும்பித் தெறித்திருக்குமல்லவா?

# செல்வோம் சிலுவையின் ஸ்தலங்களிலே

I

அநீத நடுவன் முன்னிலையில், அமைதியாகவே நின்று
அநீதத் தீர்வையைக் கையேற்ற, அன்பரே! என் யேசுவே!
கொடிய பாதகம் புரிந்துன், இதயகமலம் வதைத்திட்ட
நிலையை எண்ணி மனம்நொந்தே, நீசத்தீர்வையைக் கையேற்று
நிற்க வேண்டியதும் நானல்லவோ?

II

மனுக்குலந்தன்னை இரட்சிக்க, மாபெரும் கேடயமென்றெண்ணி
இருகரம் நீட்டியே சிலுவைதனை, ஏந்திய எந்தன் இரட்சகரே!
பலதரம் புரிந்த பவத்துக்காம், அநித்திய ஆக்கினைநீங்கிடவே
சிதைந்திடும் இதயத் துயருடனே, சிலுவையாம் துன்பந்தனைச்சுமந்தே
செல்ல வேண்டியதும் நானல்லவோ?

III

பாரச்சிலுவையுமை அழுக்க, படபடப்புடனே தள்ளாடி
பாரினில் பதைத்தே விழுந்திட்ட பரமனே, என் பார்த்திபனே
கோரச் சிலுவை யஃதல்ல, பாரைத் தாங்கும் மகிபனுமை
சேரும் எந்தன் பவச்சுமைதான், சேர்ந்தே அளவுமீறியதால்
சோரப்பண்ணியதும் நானல்லவோ?

IV

பின்னும் எழுந்தே நடக்கையிலே, பீறிட்டோடுந் துயருடனே
அன்னை எதிரே வந்ததனால், அவஸ்தையுற்ற அன்பரே!
என்றும் செய்யும் பவத்தினாலே, மைந்தனும்மை வருத்துவதால்
சிந்தும் அன்னை கண்ணீர்கண்டு, சிறுமைவழியைக் கைவிட்டு
நொந்தழ வேண்டியதும் நானல்லவோ?

V

வலிந்தே சிலுவை சுமக்கவந்த, வலிமை மிகு சிமியோனுள்ளம்
கசிந்தேயுன் பாலுருக வைத்த, கர்த்தனே! என் தற்பரனே!
நலிந்தே நரகபாதையிலே, நாளும் செல்லும் ஆத்துமாக்கள்
தெளிந்தே சிலுவைப்பாதையிலே, திடமுடனே திரும்பச் செய்துனை
தேற்ற வேண்டியதும் நானல்லவோ?

VI

வெஞ்சினங் கொண்ட யூதரிடை, விறுக்கெனப்புகுந்தே முகந்துடைத்த
அஞ்சா நெஞ்சுடை மாதுக்கு அரும்பேறளித்த அன்பரே!
முகத்தாட் சணியத் திரைநீக்கி, முதல்மறை காட்டிடும் கடமைகளில்
அகத்தினில் அன்புடன் செயல்புரிந்து, அன்பருன் ஆகுலக் கண்ணீரை
அகற்றிட வேண்டியதும் நானல்லவோ?

VII

கொண்ட கோபம் தாளாமலே, கொடிய யூதர் முன்னேதள்ள
இரண்டாம் முறையும் தரையில்வீழ்ந்த, இரட்சகரே! என் இன்னுயிரே!
மீண்டும் மீண்டும் செய்பவத்தால், மிகுதியாகும் உன் துயரைக்
கண்டும் மனது கலங்காது கடின நெஞ்சின் கொடும் உணர்வால்
கஷ்டப்படுத்துவதும் நானல்லவோ?

(வளரும்)

## செயலொன்று கண்டேன்:

புரட்டஸ்தாந்து மதத்தினரின் விவாகவிழாவொன்றுக்குப் போயிருந்தேன். நமது வீடுகளில் அநேகமாக மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்துவிட்டு, தலையில் நீண்ட துப்பட்டியை வைத்து அலங்கரிப்பதற்கு மணமகன் வீட்டாரையே எதிர்பார்த்திருப்பது சாதாரண வழக்கம். ஆனால், இப்போ பெண்ணுக்கு அலங்காரம் செய்தபின் மணமகன் வீட்டாரும் மற்றையோரும் பெண்ணின் அன்னையைத் தேடிக்கொண்டிருந்தனர் அந் நீண்ட வெள்ளை முக்காட்டை அணிவிப்பதற்காக. எங்கோ அவசரவேலையாக இருந்த அவள் தாய் வந்து மிகப் பெருமையுடன் அத்துப்பட்டியைத் தன் மகள் தலையில் போர்த்துவிட்டுத் திரும்பினாள். மிகுதி அலங்காரத்தை மற்றையோர் முடித்தனர். ஒருநாளும் இவ்வித காட்சியைக்காணாத யான் "இது என்ன புது வழமையாயிருக்கிறதே" என்று அடுத்திருந்த ஒரு பெண்மணியை வினவினேன். "புதுமையான வழக்கமல்ல, சரியான வழக்கமென்று சொல்லுங்கள். ஒரு **பெண் கன்னிகை என** மணமகன் வீட்டார்முன் பெருமிதத்துடனும், சரிவரவும் **நிரூபிப்பதற்கு ஒரு தாயைத்தவிர வேறுயாரால் முடியும்.** தாய்தானே தன் பெண்ணைச் சரிவர அறிந்தவள்" என்று கூறினாள் அவள். கிறிஸ்தவ தாய்மாரே! நாகரிகப் போக்கில் தம்கற்பைப் பறிகொடுக்காது உங்கள் பெண்சிறார்களை நல்ல முறையில் வளர்க்கவேண்டியது உம் கடனன்றோ!

### கோழிமுட்டைகளைப் பாதுகாக்கும் ஐந்து முறைகள்

1. முட்டைக்கோதின்மேல் பிசின், மெழுகு அல்லது கொழுப்பைப் பூசிப் பாதுகாக்கலாம்.
2. அடுப்புக்கரியைப் பொடியாக்கி அதில் முட்டைகளைப் புதைத்து வைக்கலாம்.
3. உமியையும், சாம்பலையும் கலந்து அதில் முட்டைகளைப் புதைத்துப் பாதுகாக்கலாம்.
4. மூன்றுமடங்குநீருடன் ஒருமடங்கு கிளிசரினைக் கலந்து அதில் முட்டைகளை வைத்துப் பேணலாம்
5. நீற்றுச் சுண்ணும்பு (Slaked Lime) ஒருபங்கும் இருபது பங்கு நீரும் கலந்து அதில் முட்டைகளைத் தோய்த்துக் காயவைத்துக் காப்பாற்றலாம்.

எல். ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாகுலப்பாதை

## அன்றும் — இன்றும்

சா. பெ.



VIII

இரத்தவெறிபிடித்த அந்தக்கும்பல் அன்னாஸ், கைப்பாஸ் என்ற பெரியமனிதர்களால் ஏவப்பட்டுச் சிலுவை சுமந்துசெல்லும் எங்கள் இரட்சகரைக் கேலிசெய்கிறது. நிந்தை அவமானங்கட் குட்படுத்துகிறது. இந்நிலையில் எங்களாண்டவரின் நிலையையெண்ணி அனுதாபப்படுவோர் யாரும்உண்டாஎன்று சுற்றிவரப் பார்க்கின்றோம்.

அவருடைய சீடர்களைக் காணோம். ஒருவர் மரியன்னையுடனே; மற்றவர்களோ அச்சம்கொண்டவர்களாக ஓடிஒளிந்துவிட்டனர். ஆம், தங்கள் அன்பான தலைவனை அவர்கள் பகிரங்கமாக மறுதலித்துவிட்டனர். அதோ, அப்பகுதியில் ஒரு சிறுகூட்டம். அந்தப்பெண்கள் எதற்காக விம்மி அழுகின்றனர்? ஆம், இரட்சகரின் பரிதாபகோலம் அவர்களைப் பதட்டமடையச் செய்துவிட்டது.

கிறீஸ்து அவர்களைத் திரும்பிப் பார்க்கிறார். "ஜெருசலேமின் புதல்விகளே! எனக்காக அழாதீர்கள். உங்கட்காகவும், உங்கள் புதல்வர்கட்காகவுமே கண்ணீர் சிந்துங்கள்" எனத் திருவுளம் பற்றுகிறார்.

வாயிலுக்குவெளியே சிறிதுதூரத்தில் "கான் அல் சயத்" (Khan-al-zayt) சந்தையிலேயே எட்டாவது ஸ்தலம் அமைந்துளது. இங்கு கிரேக்க ஓதோடக்ஸ் சபையினரின் தேவாலயம் ஒன்றுண்டு. அவ்வாலயச்சுவரில் ஒரு கருப்புச்சிலுவை இவ்ஸ்தலத்தை நினைவு படுத்துகிறது. இவ்வாலயம்பிரதான திருநாட்களில் மட்டுமே திறந்துவைக்கப்படும்.




IX

ஜெருசலேமின் புதல்விகட்குமட்டுமல்ல, எம்மவர் அனைவர்க்குமே அவ்வாக்கியத்தின் மூலமாகச் சிலஅரிய கருத்துக்களைச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்த கிறீஸ்து சிலுவையுடன் மெல்லமெல்ல முன்னேறுகிறார். கூட்டத்தோடு கூட்டமாக நாமும் பின்தொடர்கின்றோம்.

சிலுவையின்பாரமும், மனுக்குலத்தோரின் பாவாக்கிரமங்களும் கிறீஸ்துவின் தோள்களில்பலமாக உறுத்துகின்றன. தட்டுத்தடுமாறித் தள்ளாடியவர் தரையின்மீது தடாலென வீழ்கிறார். பாரச்சிலுவையும் அவர்மேல் பொறிகின்றது.

கிறீஸ்து மூன்றாம்முறையாகச் சிலுவையுடன்வீழ்ந்த ஒன்பதாம்ஸ்தலத்தில் இன்று கோப்ரிக் ஓதோடக்ஸ் பத்திரியாக்குவின் வாசஸ்தலம் காணப்படுகிறது. கிறீஸ்து தரையிலே வீழ்ந்தஇடம் ஒருசதுரக்கோட்டினுள் குறிக்கப்பட்டுளது. முழந்தாளிட்டு அவ்விடத்தை முத்திசெய்தபின் எம்வியாகுலப் பாதையைத் தொடர்வோம்.

இனிமேல் நாம் மற்றைய ஐந்து ஸ்தலங்களையும் ஒருபெரும் ஆலயத்தினுள்காணப்போகின்றோம். கிறீஸ்துவின் சிலுவை நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து கிறீஸ்துவை அடக்கப்பட்ட கல்லறைவரை இம்மகாலயம் நீண்டிருந்தது. கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்திகாலத்தில்கட்டப்பட்ட இவ்வாலயத்தில் பலவிதஅழிவுகளும், மாறுதல்களும் காலக்கிரமத்தில் இடம்பெற்று, இன்றைய மகாலயமாகக் காட்சிதருகின்றது. இப்பெரிய ஆலயத்தின் ஒவ்வொருபகுதிகளில் மிகுதி ஐந்து ஸ்தலங்களையும் தியானிப்போம்.




X

இதுவரை திறந்தசூரியவெளிச்சத்தில் நடந்துகொண்டிருந்துவிட்டு, இருளடர்ந்த அப்பெரும்ஆலயத்துள் பிரவேசித்தவுடன் நாம்முதலில் திகைத்து நிற்கின்றோம். வலதுபக்கமாகச் சுமார் பதினான்குஅடி உயரத்தில் கல்வாரிச் சிற்றாலயம் காணப்படுகிறது. ஆதியில் கிறீஸ்துவின் சிலுவைநிறுவப்பட்டகுன்றை மையமாகக்கொண்டு இச்சிற்றாலயத்தை அமைத்தனர். பின்னர் சிற்றாலயத்தை மையமாகக்கொண்டு புனித கல்வாரி மகாலயத்தை நிறுவினர்.

கல்வாரியின் படிகளில் கிறீஸ்து வேதனையுடன் அடிமேலடி வைத்தது போல நாமும் அப்படிகளில் ஏறுகின்றோம். கிறீஸ்துவை அவ்விடத்தில் நிறுத்துகின்றனர். அவரது மரணதண்டனையை நிறைவேற்றுமுகமாக ஆடைகளனைத்தையும் களைகின்றனர். கல்வாரிச்சிற்றாலயத்தின் வாயிலண்டையிலேயே அன்று தேவகுமாரனை மானபங்கப்படுத்திய இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

XI

சிலுவையைத் தரையிலேதள்ளி அதன்மீது கிறீஸ்துவைத் தள்ளுகின்றனர் காதகர்கள். கூரிய ஆணிகளால் அவரைச் சிலுவையிலறையும் சப்தம் எங்கள் இதயத்தில் எதிரொலிக்கிறது. எங்கள் உள்ளத்தைக் கல்லாக்கிக்கொண்டு கல்வாரிச் சிற்றாலயத்தினுள் நுழைவோம்.



கல்வாரிச் சிற்றாலயம் இருபகுதிகளையுடையது. ஒவ்வொருபகுதியும் ஒரு சிற்றாலயம்போல் காட்சிதருகிறது. வலதுபக்கத்திலுள்ள சிற்றாலயப்பகுதி பதினோராம் ஸ்தலமாகும். பிரான்சீஸ்கன்சபைத் துறவிகள் இப்பகுதியைப் பராமரித்து வருகின்றனர்.

இங்கு இப்பீடம் லத்தீன்பீடமென அழைக்கப்படுகிறது. பீடத்தின்மீது இக்காட்சி சித்திரிக்கப் பட்டுளது. வீரர்கள் இவ்விடத்திலிருந்து சிலுவையைச் சிறிதுதூரம் இழுத்து அங்கு தோண்டப்பட்டிருந்த குழியினுள் தள்ளினர்.




XII

சிலுவையை உயர்த்துகின்றனர். பெருங்குரவையுடன் குழியினுள் நிறுவுகின்றனர். சித்திரங்களில் இன்று நாம் காண்பதுபோல அச்சிலுவை மிகஉயர்ந்ததல்ல. அறையப்பட்டுள்ள மனிதரின் பாதங்கள் நிலத்திலிருந்து சுமார் ஒருஅடி உயரமுள்ளதா யிருக்கத்தக்க அளவினதே அச்சிலுவையாகும்.

இடதுபக்கத்திலுள்ள சிற்றாலயப் பகுதி பன்னிரண்டாம் ஸ்தலமாகும். கிரேக்க ஓதோடக்ஸ் சபையினரின் பாதுகாப்பிலுள்ளது இப்பகுதி. கீழைப்பகுதி ஆலயங்களில் காணக்கூடிய அலங்கார வேலைப்பாடுகள் இங்கும் உண்டு.

பீடத்தின்மீது மிகப்பெரிய அளவில் பைஜாந்திய அமைப்பினதான அறையுண்ட நாதரின் சிலுவையுண்டு. கிறீஸ்துவின் சிலுவைநாட்டப்பட்ட குழியை மாபிள்கற்களால் அலங்கரித்துள்ளனர்.

நாம் ஒருபெரும் தேவாலயத்துள் நிற்பதால் சிலவேளைகளில் கல்வாரி மலையின் உச்சியில் நிற்கின்றோமென்பதை நம்பமுடிவதில்லை. குன்றின் மேலெழுந்த ஆலயத்தின் அமைப்பே இவ்விதசந்தேகத்துக்கு இடமாகின்றது.

முழந்தாட் படியிடுகிறோம்: எமக்காக உயிர்நீத்த மகிபனின் உயிரற்ற சடலத்தைப் பார்த்து எம்பாவங்களை எண்ணியெண்ணிக் கண்ணீர்சிந்துகிறோம். பின்னர் சுற்றிவர நடப்பதையும் கவனிக்கிறோம்.




XIII

அறையுண்டோரின் கால்களை முரித்து அவர்களின்மரணத்தை ஸ்திரப்படுத்துகின்றனர். எமதாண்டவருக்கும் இவ்விதம் செய்வார்களோ எனப் பதறுகின்றோம். அவர் ஏற்கனவே மரித்துவிட்டார் என்பதை அவர்கள் அறிந்துளர். எனினும், ஒருவன் அவர்விலாவில் ஈட்டியால் குத்துகின்றான்.

சகலமும்முடிந்தது. சகலரும்போய்விட்டனர் ஒருசில நண்பர்களைத் தவிர. அந்தநண்பர்கள் சிலுவையிலிருந்து எங்கள் மகிபனின் சடலத்தை இறக்க முயற்சிக்கின்றனர். பொங்கிவரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நெஞ்சிலெழும் உணர்ச்சி அலைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு நாமும்அவர்களுக்கு உதவி செய்வோம்.

ஆம், பதின்மூன்றும் ஸ்தலத்தில் நிற்கின்றோம். கல்வாரி மகாலயத்தின் தென்பகுதியில் முந்தியஸ்தலங்கட்குச் சற்றுஅண்மையில் இப்பகுதி அமைந்துளது. அங்கு ஓர்பெரிய கருங்கற் பாறையைக் காண்கின்றோம். அதைச்சுற்றி ஆறுபெரிய மெழுகுவர்த்திகள். கற்பாரின்மேலே ஏழுபெரிய தூண்டாமணி விளக்குகள்.

கிறீஸ்துவின் சடலத்தைச் சிலுவையினின்றும் இறக்கிவிட்டோம். சற்றுநேரம் வியாகுலத்தாயின் மடியில் மைந்தனை வளர்த்துகிறோம். ஆறுதலாக இழவுகொண்டாடத் தருணமில்லை. அரிமத்தியாவின் யோசேப்பு அன்னையண்டை வருகிறார். நண்பர்களின் உதவியோடு சடலத்தைத்தூக்கி நாம் மேற்கூறிய கற்பாரின்மேல் வளர்த்துகிறார். வாசனைத் திரவியங்களைத் தேகத்தில்பூசி, பரிவட்டத்துணியால் சுற்றுகிறார். சிறிதுநேரம் அதனண்டை தியானித்துவிட்டுச் சடலத்தைத் தூக்கிக்கொண்டு கல்லறையை நோக்கிச் செல்வோம்.

XIV

அரிமத்தியாவின் யோசேப்புக்குச் சொந்தமான தோட்டமொன்று அண்மையில் உண்டு. அத்தோட்டத்தில் ஒருகல்லறை இருப்பதாகவும், சடலத்தை அங்கே புதைக்கலாமெனவும் அவர் கூறுகிறார். நின்றுயோசிப்பதற்கு அவகாசமில்லை. சடலத்தைத் தூக்கிக்கொண்டு யோசேப்புவின் தோட்டத்தைநோக்கிச் செல்கின்றோம்.

கல்வாரி மகாலயத்தின் டோம் எனப்படும் பெரிய வில்மச்சுமாடத்தின்கீழே ஒருசிறுசிற்றாலயம்உண்டு. சிற்றாலயம் என்பதைவிடச் சிறுகுடிசை என்றுகூறுவதே பொருத்தமானது. முந்திய சிற்றாலயம் நெருப்பினால் அழிந்தபின் தற்போதையது 1808-ல் நிறுவப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளே செல்வோம். ஒரு சிறு சுரங்கத்தினுள் நுழைவதுபோன்ற உணர்ச்சி. மாபிள்கற்களால் அவ்வறை அலங்கரிக்கப் பட்டுளது. ஆறு அடிச் சதுரமே அச்சுரங்கத்தின் விஸ்தீரணம். ஏககாலத்தில் இருவர் அதற்குள் செல்லமட்டுமே இயலும்.

மூன்றடி உயரமுள்ள மாபிள் கற்பார் ஒன்று சுரங்கஅறையை மூடிய வண்ணம் வலதுபக்கத்தில் காணப்படுகின்றது. இதுவே நமதாண்டவரின் சடலத்தைத்தாங்கிய கல்லறை நிறுவிநின்ற தலம். ஆயின், இன்று நாம் காண்பது அதேகல்லறையல்ல.

1009–ல் காலிப்–எல்–கக்கிம் (Caliph -El-Hakem) என்ற தலைவன் பலஸ்தீனுவை அடிப்படுத்தியபோது இக்கல்லறையைப் பரிநாசம் செய்யும்படி கட்டளையிட்டான். அவனது கட்டளையின்படியே கல்லறை அழிக்கப்பட்டு, சூழவிருந்த கற்பாரைகளும் அப்புறப்படுத்தப்பட்டன.

இந்தக் கல்லறையின் மேலேதெரியும் டோம்எனப்படும் வில்மச்சு மாடத்தில் மற்றைய எத்தேவாலயத்திலும் காணப்படாத சிறப்புஒன்றுண்டு. கிறீஸ்துவின் உத்தானத்தைக் காட்டுமுகமாகக் கல்லறையின் நேரே மேலுள்ளமாடம் திறந்தநிலையில் காட்சிதருகிறது.

### அவர் இங்கில்லை

வியாகுலப்பாதையின் வழியாகக் கிறீஸ்துவைப் பின்தொடர்ந்தோம். பதினன்கு தலங்களிலும் அவர் செயல்களைத் தியானித்தோம். அவரது கல்லறையைக் கண்ணீர் மல்கிய வண்ணம் நோக்கினேம். அது வெறுமையாகக் காணப்பட்டது.

எங்கள் கண்ணீரினூடே தேவதூதனின் உருவம் தெரிகிறது. அவர் இங்கில்லை. உத்தானமாகிவிட்டார் என அத்தூதன் கூறுகிறன். எங்கள் உள்ளமோ மகிழ்ச்சியால் அலைமோதுகிறது.

ஆம், வியாகுலப்பாதையின் முடிவில் மீண்டும் எமதுள்ளம் அமைதியுற்றது. துக்ககரமான தபசுகால முடிவில் மகிழ்ச்சிகரமான அல்லேலூயா. துன்பத்தின்பின் இன்பம் என்ற சிந்தனைகளுடன் ஜெருசலேமில் நாம்செய்த சிலுவைப்பாதையை முடித்துக்கொள்வோம்.

* * *

### இக்கட்டுரைக்கு ஆதாரமான நூல்கள்


1. THE WAY OF THE CROSS—by L. P. SEGLIAS.
2. THE SACRED PASSION OF JESUS CHRIST — by R. F. CLARK.
3. VIA DOLOROSA — Catholic Fireside.


### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயநாயகியின் அனுக்கிரகத்தால் எனக்குச் சுகம்கிடைத்தமைக்கு நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன்.

ஞே. மேரி

# சிந்தித்துச் செயலாற்றுக!

### நான் பிறந்த காரணத்தை நானே அறியு முன்னே........

மானிடனே! பிறந்தாய். இல்லை, படைக்கப்பட்டாய் பரமனுல். ஆதியில் சருவேசுரன் ஒருபிடிமண்ணை எடுத்து தமது ஆவியை ஊதி மனிதனைப் படைத்தார். இதை நினைவுறுத்தவே அன்று குரு எமது நெற்றியில் சாம்பலைப்பூசி, "மனிதனே! மண்ணுயிருக்கிருய், மண்ணுய்ப் போவாய்" என்று ஞாபகமூட்டினுர். நான் பிறந்த காரணத்தை நான் அறியவில்லை. நான் சீவிக்கிறேன். 'நான் அல்ல கிறீஸ்து என்னில் சீவிக்கிருர்' என்று அர்ச். சின்னப்பர்கூறவில்லையா? தம்மை அறிந்து, நேசித்து, சேவித்து மோட்சத்தை அடையவே எம்மை உண்டாக்கினுர். நானும் உலக வாழ்விலும் சரி ஞானவாழ்விலும்சரி கிறீஸ்துவைப் பிரதி பலிக்கின்றேனு?

### வாழ்க்கையின் முடிவெங்கே?

வாழ்க்கை பெரும் போராட்டம்; நாம் போராடும் வீரர்கள். மலைபோல் துன்பங்கள், அலைபோல் எண்ணங்கள், வானுயர்ந்த கற்பனைக் கோட்டைகள், வீறுநடைபோடும் விஞ்ஞானவிந்தைகள், புதியகண்டுபிடிப்புக்கள், பட்டம் பதவிகள் இவையனைத்தும் நம்மோடு கூடவருமா? இவ்வுலகில் இன்பத்தை அனுபவித்தோம், ஆனுல், மறுஉலகில்?

### சிந்தனை செய்மனமே!

மனிதனே! மரணத்தைப்பற்றிச் சிந்தித்ததுண்டா? ஆம், மரணம் கள்வனைப்போல்வரும். மரணத்துடன் இவ்வுலகவாழ்க்கை முடிவடைந்துவிட்டது. என்சீவியம் எப்படிப்பட்டதாயிருந்தது? தனித்தீர்வை—பொதுத்தீர்வை. இவற்றின் முடிபு? மோட்சம்—நரகம். எது ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது? நரகம்–பிசாசுகள், தாங்கொணு வேதனை, பயங்கரம். "சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டகன்று பசாசுக்கும் அதன் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் இடத்துக்குப் போங்கள்." என்ன பயங்கர வார்த்தைகள்.

### பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யார்?

உலக வாழ்க்கை, உல்லாசங்கள், அனைத்தும் நீர்க்குமிழி. மண் மீது பிறந்த அனைவரும் மாண்டுமடியவே வேண்டும். ஆண்டியும் எங்கே? அரசனும் எங்கே? அசடனும் எங்கே? அறிஞனும் எங்கே? மண்ணேடு மண்ணுய் மாண்டு மடிந்து விட்டனர். ஆம், அனைவரும் அழிந்தொழியத்தான் வேண்டும். ஆனுல், மாண்டு மடிந்தபின் மீண்டும் ஒருநாளைக்கு எழவேண்டும். மரணம் யாரைத்தான் பூமியில் விட்டுவைக்கப்போகிறது. பிறந்தஅனைவரும் இறக்கவே வேண்டும். இதுதான் இயற்கைநியதி.

### யாருக்கு நான் தீங்கு செய்தேன் இறைவா?

"இச்சிறியோரில் ஒருவனுக்குச் செய்தபோது எனக்கே செய்தீர்கள்." கிறீஸ்தவர்களை வதைக்கக் கங்கணம் கட்டிச்சென்ற சவுலை, "சவுலே! சவுலே! நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிருய்" என்று கேட்கவில்லையா? நானே மீண்டும் மீண்டும் உமக்குத் தீங்கு செய்கிறேன். என்பாவங்களால் திரும்பவும் திரும்பவும் உம்மைச் சிலுவையில் அறைகின்றேன். ஆ! வியாகுலம் நிறைந்த வீரத்தாயே! உமது இதயத்தைப் பிளந்திருக்கும் வியாகுலவாள்களை நானும் சேர்ந்தே உம்மிருதயத்தில் பாய்ச்சினேன்.


### நம் எல்லோர்க்கும் தந்தை இறைவன்.

பாரினைமீட்கத் தன் ஏகமைந்தனையே அனுப்பினுர் எம்மீதுள்ள பாசத்தால். "சருவேசுரன் உலகத்தை எவ்வளவாக நேசித்தாரென்ருல் தமது ஏககுமாரனையே தந்தார்." நம்மைப் படைத்தபிதாவே நம்மைக் காத்தும் வருகிருர். "படைத்தான் படைப்பெல்லாம்மனுக்காக; மனுவைப்படைத்தான் தனை வணங்க." நாம் தினமும் பரமனை "எங்கள் பிதாவே" என்று அழைக்கிறேம். நம் எல்லோர்க்கும் தந்தை அவர்தான்.

### ஆராய்ந்துபார் மனக்கண்ணுக்குள்ளே........

இதோ இரட்சணியத்தின் காலம். மரங்களில்கோடரி போடப்பட்டிருக்கிறது. நற்கனிகொடாதமரங்கள்எல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும். கிறீஸ்தவனே! இத்தபசுகாலத்திலாவது இவற்றைச்சிறிது சிந்திக்கிருயா? தக்ககாலம் தவறவிடாதே? காலம் இருக்கிறதென்று சொல்லுவாயாக்கும், 'மூடனே இன்றிரவே உன்னிடத்தில் நின்று உன் உயிரைப் பறித்தால்......, காலத்தின்கோலத்தை நம்பி மோசம்போகாதே.

இ. பேர்ணுட்



## கண்ணீர் சிந்துவதேனம்மா?

(தேவதாயின் 5-ம் வியாகுலம்)

(1)
கடின சிலுவையைச் சுமந்து சென்றே
நெடிய மலையுச்சி சேர்ந்திடவே
காதகர் சிலுவையின் மேல்வீழ்த்தி
நாதரின் அவயவம் ஆணிகளால்
அறைந்திடச் சுத்தியலால் அடிக்க
நிறைந்திடும் குருதி பெருக்கெடுக்கச்
சிதைந்தவுன் இதயத்தில் பட்டதெனப்
பதைத்துமே பதறித் துடிதுடித்தே
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(2)
கர்த்தன் யேசுவைச் சிலுவையிலே
காட்சிப் பொருளாய் நிறுத்திடவே
மைந்தன் அவஸ்தையைக் கண்ணுற்றே
நைந்தே அருகில் நின்றபோதும்
சொல்லால் எமைக் கையளித்தபோதும்
எல்லாம் முடித்துயிர் விட்டபோதும்
ஏக மைந்தனைப் பலியிட்டே
ஆகுல வாளூடுருவ நீரும்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(3)
சிலுவைப் பலியைக் கடைசிவரை
சேர்ந்தே செலுத்திய மாமரியே! எம்
கடைசி அவஸ்தை வேளையிலே
கர்த்தன் காயப் பலன்களினுல்
அலகையின் மாய்கையினுலே வரும்
உலக பாசத்தை நீக்கி
உத்தமராய் உன் மைந்தனுடன்
நித்தியம் வாழ நிலைநிற்போம்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

—செல்வி ரோஜா சாமுவேல்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் தோ. ம. வேதநாயகம்
அவர்கள்
அமரத்துவமடைந்த

## 2-ம்வருட மரணஞாபகம்

| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு: |
| 19-4-1943 | 16-3-1962 |

"மரித்தோருக்காகப் பிரார்த்திப்பது பரிசுத்தமும், பிரயோசனமுமான யோசனை."

இரக்கமுள்ள யேசுவே, இவருடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக்கொடுத்து, மோட்சஇராச்சியத்தில் சேர்த்துக்கொள்ளும்.

மண்ணைவிட்டு மறைந்தாலும் எம் கண்ணைவிட்டு மறையாத எம் அருமை மகன் மரியான் வேதநாயகம் அமரத்துவமடைந்த 2-ம்வருடம் 16-3-64-ல் பூர்த்தியாகிறது. அன்று அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நெடுந்தீவுயுவானியார் கோவிலில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர்கள், பந்துமித்திரர், விசுவாசிகள் யாபேரும் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகவேண்டிக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

இவரைஇழந்து துயருறும்:
பெற்ருேர், சகோதரர், மைத்துனர்,
பிள்ளைகள், உறவினர்.

5–ம் வாய்க்கால்,
பரந்தன்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சென்ற மாசித்திங்கள் 8-ம்நாள் $4\frac{1}{2}$ பவுண் நிறையுள்ள சங்கிலிஒன்று கவலையீனத்தால் தொலைந்துவிட்டது. எங்கு தேடியும், எவரிடம்கேட்டும் கிடைக்கவில்லை. பின் வியாகுலமாதாவின் அருளால் பங்குனித்திங்கள் 8-ம்நாள் அப்பொருளைஎடுத்தவர் தான்எடுத்ததாக ஒப்புக்கொண்டு, பொருளின் பெறுமதியான வேறுபொருளை ஈடாகக் கொடுத்துள்ளார். மாதாவின்நாமம் போற்றப்படுவதாக.

ம. பொன்னுத்துரை

பள்ளிமுனை, மன்னர்.

# உல்லாச வேளை

நமது நிருபர் அமலன்

அம்மா: தபசுகாலமும் ஒவ்வொரு நாளாகக் கடந்து கொண்டேயிருக்கிறது. கர்த்தருடைய பாடுகளைப் பற்றியே நமது ஓய்வு வேளைகளில் பேசுவது நல்லதல்லவா?

அப்பா: ஆம். மிகவும் நல்லது. கிறீஸ்துநாதரின் பாடுகளை இன்றும் நமக்கு நினைவுறுத்திக் கொண்டிருக்கும் புனித சின்னங்கள்பற்றிப் பேசுவோம்.

நிர்மலா: "சேர். தோமஸ் மலோரி" எழுதிய "மோட்ரி டி ஆர்தர்" என்னும் நூலில் ஒரு ருசிகரமான சம்பவம் உண்டு. கிறீஸ்து பெரிய வியாழனன்று கடைசி இராப்போசனவேளை இரசத்தை இரத்தமாக்கியபோது பாவித்த பாத்திரத்தைப்பற்றிச்சேர் கலகாட்என்பவர் விபரிக்கின்றார்.

அகஸ்ரின்: இந்த கலகாட் என்ற பிரமுகர் அரிமத்தியாவின் யோசேப்புவின் சந்ததியினர் என்பதும் இங்கு குறிப்பிடவேண்டும். யோசேப்பு இந்தப் பாத்திரத்தில் கிறீஸ்துவின் உடலிலிருந்து வழிந்தோடிய திருவிரத்தத்தில் சிலவற்றைச் சேமித்துக் காப்பாற்றினார்என பாரம்பரியங்களிலிருந்து அறிகின்றோம்.

இயூஜின்: இப்போது நியூயோர்க் நகரிலுள்ள நூதனசாலையொன்றில் "அந்தியோக்காவின் பாத்திரம்" என்ற நாமத்துடன் ஒரு பாத்திரம் காப்பாற்றப்பட்டுவருகின்றதாம். இந்தப்பாத்திரம் அந்தியோக்கா நகரில் புதைபொருளாராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்டது. பைபிள் ஆராய்ச்சியாளர்களும், புதைபொருள் வல்லுநர்களும் இதைப்பரிசோதித்துப் பல விசாரணைகளின்பின் கடைசி இராப்போசனத்தின்போது பாவிக்கப்பட்ட பாத்திரமாயிருக்கக்கூடுமென அபிப்பிராயம் தெரிவித்தார்களாம்.

அப்பா: அந்தியோக்கா நகரிலேயே இராயப்பர் தமது சிம்மாசனத்தை ஸ்தாபித்தார். எனவே, அரிமத்தியாவின் யோசேப்பு அவரிடம் கர்த்தரின் பாத்திரத்தைக் கொடுத்திருக்க அவர் அந்தியோக்காவில் காப்பாற்றிவந்திருக்கக்கூடுமல்லவா?

அன்ரன்: இராப்போசனத்துக்குப்பின்னே ஜெத்சமெனித் தோட்டத்துக்குக் கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் சென்றார்களே. அந்தத் தோட்டத்தைப்பற்றி ஏதாவது தகவல் உண்டா?

ஆஞ்செலா: இந்தத் தோட்டத்தில்தான் இருமாதங்கட்குமுன்னால் பாப்பரசர் பலஸ்தீனாவுக்கு யாத்திரை சென்றபோது இரண்டு இரவுகள் தங்கினார்.

பெரியண்ணா: ஒலிவேத் மலைச்சரிவில்தான் ஜெத்சமெனித் தோட்டம் உள்ளது. மலையினுச்சியில் பாப்பரசரின் ஸ்தானாபதியின் வாசஸ்தலம் உண்டு. இந்த வாசஸ்தலத்தில்தான் பாப்பரசர் தரித்தார். ஜெத்சமெனித் தோட்டத்தை இன்றுமே நாம்காணக் கூடியதாகவுள்ளது. எட்டுப் பெரிய ஒலிவமரங்களைத் தோட்டத்திலே காணலாம். ஒலிவமரங்கள் நீடிய ஆயுளையுடையன. கொப்புகள், கிளைகள், பகுதிகள் என்பன நீண்டகாலத்தின்பின் பட்டுப்போகும்போது அடிமரத்திலிருந்து புதியகிளைகள் தளிர்விட்டெழும். எனவே, தறிக்கப்பட்டவைபோக மிகுதியாயிருக்கும் எட்டு மரங்களும் கர்த்தரின் பாடுகளின் ஆரம்பத்தைப்பற்றி எமக்குக் கூறிக் கொண்டேயிருக்கும்.

கார்மெலா: சிஸ்ரர் சொன்னா, உலகிலேயுள்ள தோட்டங்களெல்லாவற்றிலும் புனிதமானதும், துக்ககரமானதுமான தோட்டம் ஜெத்சமெனித் தோட்டம்தானாம்.

அகஸ்ரின்: இந்தத் தோட்டத்தைப் பிரான்சிஸ்கன் சபைத்துறவிகள் வெகுகவனமாகப் பராமரித்துவருகின்றார்கள். பாஷன் பிளவர்ஸ் எனப்படும் "பாடுகளின் பூக்களைத்" தோட்டத்தின் எல்லாப்பகுதிகளிலும் காணலாம். கருஞ்சிவப்பு நிற ரோஜாச்செடிகளும் தோட்டத்தைச்சுற்றி அழகுசெய்கின்றன.

அப்பா: ஜெத்சமெனித் தோட்டத்தில்தான் கிறிஸ்து பிடிக்கப்பட்டதும், சீடர்கள் அசாக்கிரதையாய் நித்திரை செய்ததுமான நிகழ்ச்சிகள் நடைபெற்றமையால் இரட்சகரின் திருப்பாடுகளில் இத்தோட்டத்துக்கும் பிரதான பங்கு உண்டு.

பெரியண்ணா: இத்தோட்டத்தை கிறிஸ்து அடிக்கடி தரிசித்தார். அவரது நண்பர்களிலொருவரே இத்தோட்டத்தின் உரிமையாளர். எனவே, கிறிஸ்து அங்கு செல்வதற்குத் தடையேதும் இருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் வார்த்தையை அசட்டைசெய்து நித்திரை செய்த இடத்தை ஒரு வெள்ளைக்கல் சுட்டிக்காட்டுகிறது.

அம்மா: அந்த இடத்தை இப்போ பார்க்கச்செல்கிறவர்களும் தங்கள் கோழைத்தனத்தால் கிறிஸ்துவை அசட்டை செய்யக்கூடாது என அந்த வெள்ளைக்கல்லு சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கும்.

பெரியண்ணா: யூதாஸ்கரியோத் கிறிஸ்துவை முத்தமிட்டுக்காட்டிக் கொடுத்த இடத்தை ஒரு நினைவுச்சின்னத்தால் காட்டுகிறார்கள். கிறிஸ்து இரத்தவெயர்வைசிந்திப் பாடுகளின் வேதனையை அனுபவித்தபோது மயங்கிச்சாய்ந்த கற்பாறையை மையமாகக் கொண்டு மாபெரும் தேவாலயமொன்றைக் கட்டியெழுப்பியுள்ளார்கள். நாலாம் நூற்றாண்டின் கட்டிடத்தை 1924-ல் மறுபடியும் புதுப்பித்துப் பல சாதியாரின் கோவில் என நாமகரணம் செய்துள்ளார்கள்.

(தொடரும்)

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரி. சதாசகாயஅன்னை, மருதமடுத் தாயார், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், மற்றும் அர்ச்சியசிட்டர்களிடம் நான் வேண்டிக்கொண்டபடியும் எனக்கு நற்பிரசவம் கிடைத்தது. அதுவுமன்றி எனதுபிதா கடுமையான நோயினின்று சுகமடைந்து வருகிறார். அவருக்குப் பூரணசுகம் கிடைக்கவும் இவர்களை மன்றாடி, நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். காலதாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ரி. ஜி. ஏ.

கல்கமுவா

## வென்றானா?

(ஆசிரியர். ச. அமிர்தநாதர்)

இயற்கையை மனிதன் வென்றானா?
இல்லை! இல்லை! இது உண்மை,
இயற்கையைத் தோழமை கொண்டறிவால்
எல்லா வளமும் பெறுகின்றான்.

●

காற்றை மழையைத் தடைசெய்யக்
கடந்த இளமை திரும்பி வர
மாற்ற இயற்கை நியதிகளை
மனிதன் தன்னால் ஆகுவதோ?

●

விளங்கி இயற்கை நுட்பங்களை
விரும்பி அறிவு துணைக்கொண்டு
வழங்கி வாழ்க்கை வசதிகளை
வையமதிலே வாழ்கின்றான்.

●

காற்றின் திசையே கலம் விடுவான்
காலம் அறிந்து பயிர் விளைப்பான், நீர்
ஊற்றின் அணையே சக்கரம் இயக்கி
உலகில் தொழில்கள் வளர்த்திடுவான்.

●

உயிரைக் கொல்லும் மின்சக்தி
உதவும் வாழ்க்கை செம்மையுற;
துயரைக் கொடுக்கும் விலங்கினமும்
தொண்டு செய்யும், பழக்கிவிடின்

●

சுற்றும்பூமி; சுரைவிதையில்
சுரையே முளைக்கும், அவரையல்ல,
மற்றும் இயல்புகள் அப்படியே
மனிதன் யாரோ? இதைமாற்ற

●

வீண் உரை, இயற்கையை வென்றோமெனல்
விளங்கினால் யாவும் புரிந்துவிடும்
ஆண்டவன் படைப்பு; அது இயற்கை
அதன்பயன் காண்போம், அறி[illegible]


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பங்குனிமாதம் 14-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org